தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2023 நளி (நவம்பர் — I) விலை உருபா 1-50 (இதழ் எண்: 160)

குற்றங்களின் மேல் குற்றம் சாட்டப்படு-கின்றன; இருந்தாலும் குத்துக் கல்லாக உட்கார்ந்திருக்கிறார் செயலலிதா!

இதற்கெல்லாம் காரணம் அவர் ஒரு பார்ப்பனத்தி என்பதும், பணக்காரர்கள் அவரின் கைகளுக்குள் என்பதுந்தான்!

ஆட்சி அழிம்புகள் எங்கே போய் முடியும்? எப்பொழுது ஒழியும்?—என்று அல்லலுறு-கின்றனர் மக்கள்!

அடுக்கடுக்காக, நூற்றுக்கணக்கான குற்றச் சாட்டுகளைத் தமிழக முதலமைச்சராக உள்ள செயலலிதாமேல் சாட்டி வருகின்றனர், எதிர்க் கட்சித் தலைவர்கள். கலைஞர் கருணாநிதி, மூப்பனார், திண்டிவனம் ராமமூர்த்தி, குமரிஅனந்தன், சுப்பிரமணியம் சுவாமி, முன்னாள் பேரவைத்தலைவர் பி.எச் பாண்டியன், முன்னாள் அமைச்சர்கள் திருநாவுக்கரசு, இராசாராம், பாலா பழனூர் இப்படிப் பலரும் பலவகையான குற்றச் சாட்டுகளைக் கூறிவிட்டனர். அரசியல் நடைமுறைகளில், சட்டம், ஒழுங்கு முறைகளில், மக்களின் அடிப்படைக் கருத்துரிமைகளில், அடக்குமுறைகளில், பொருள் கொள்ளையடிப்புகள், கையாடல்கள், கையூட்டு ஊழல்கள், கொலைகள், சலுகைகள், உரிமை வழங்கல்கள்—என்றவாறு பல கோணங்களிலும் குற்றச் சாட்டுகளை மலைமலையாகக் குவித்து விட்டனர்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் செயலலிதா மனம் குன்றியதாகவும் தெரியவில்லை; மசிந்ததாகவும் உணரமுடியவில்லை. "தோளின் மேலே தொண்ணூறு அடி; துடைத்துப் போட்டால் ஒன்றுமில்லை" என்பது போல், அதிகார நாற்காலியை விட்டு அசையாமல், கல்லுளிமங்கன் என்பார்களே,

அதுபோல் நெகிழாமல் நெளியாமல், குத்துக்கல்லாட்டம் உட்கார்ந்திருக்கிறார். இந்த வகையில், எந்தப் பழிக்கும் மானம் உறைக்காத ஒரு விலைமகள் மனம் அந்த அம்மையாருக்கு.

'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்,உயிர் நீப்பர் மானம் வரின்' என்னும் குறளாசிரியர் கூற்று பலிக்காத ஒரே ஓர் உயிர், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில், செயலலிதா ஒருவராகத்தான் இருக்கமுடியும். இதற்கு முன் பெண் பழி சுமந்த நன்னன் என்றோர் அரசன் பழிக்கு அஞ்சாக் கொடியன் ஒருவன் இருந்தான். ஆனால், அவனும் கூட கொடிய அரக்கவுள்ளம் படைத்திருந்தானே தவிர, இதுபோல், ஊழல் பேரரசனாகவோ, கோடி கோடியாய் மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பவனாக, ஊரார் உடைமையைச் சுருட்டிக் கொள்ளும் மிடா விழுங்கியாக இருந்ததில்லை. அம்மாடியோவ்! இந்த வகையில் செயலலிதா, வேறு எந்த நாட்டிலும், எந்தக் காலத்திலும் இல்லாத தனி யுருவம்!

"இந்தியாவைப் பொறுத்தவரை வளர்ந்து வரும் சிக்கல்களில் ஊழல் முன்னணி இடத்தைப் பிடித்துவிட்டது. அரசியலில் மட்டுமின்றி, ஆட்சியாளுமை, வணிகம், கல்வி மற்றும் அறமன்றத் துறைகளிலும் கூட கையூட்டு ஊழல் பேயாட்டம் ஆடுகிறது...கடந்த 25ஆண்டுக் காலத்தில்தான் இது ஒரு பெரிய சிக்கலாய், புற்று நோயை விட, 'எய்ட்சு'நோயைவிட, குமுக நலத்தையே சீரழித்து விடும் கொடிய நச்சுயிரியாகப் பரவி விடடது. இந்தப் போக்கைத் தடுக்காவிட்டால் நாட்டின் எதிர்காலமே பாழாகிவிடும்" என்று தீவிர பார்ப்பன இதழ்களே (தினமணி 9-8-92 ஆசிரியவுரை) மனம் நொந்து எழுதும் அளவுக்கு நாட்டில் குறிப்பாக ஆளும் கட்சித் தலைவர்களிடம் முன் எப்பொழுதுமே இல்லாத அளவுக்கு ஒழுக்கக்கேடுகள் இனி, சீர்திருத்தமே செய்ய முடியாது என்னும் அளவுக்கு—மலிந்து விட்டன.

"இந்த நாட்டில் ஊழல் என்பது' இப்பொழுதெல்லாம், ஒரு குற்றமே இல்லை" என அன்றைய தலைமையமைச்சர் இந்திராகாந்தி ஒரு முறை கூறினார். அன்று அவர் கூறியது இன்று அனைவர்க்குமே ஒரு பாதுகாப்பான—வழிகாட்டியான—நல்லுரையாகப் போய்விட்டது.

முன்னாள் மாநிலக் காவல்துறை இயக்குநர் (D. G. P.) ஒருவர் அண்மையில் (5-12-92) மனம் நொந்து தினமணியில் "சீட்டுக் கிழியும் நாள் வெகு தூரத்தில் இல்லை" என்று மனம் வெதும்பிப் பின் வருமாறு எழுதியிருந்தார். இத்தனைக்கும் அவர் ஒரு பார்ப்பனர். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் அதில் சில உண்மைகளைச் சொல்லியிருந்தார்.

"அரசன் (அரசியும் கூடத்தான்) தவறே செய்யமாட்டார்; அவர் தவறு வரம் பெற்றவர்' என்ற நம்பிக்கை ஒரு காலத்தில் நிலவியதுண்டு... நமது நடுவண், மாநில அமைச்சர்கள் தங்களைப் பேரரசின்படி நிகராளிகள் (அவர் எழுதியிருந்தது 'சாம்ராஜ்யப் பிரதிநிதிகள்) அல்லது 'சுல்தான்கள்" என்று நினைத்துக் கொண்டு செயல்படுகிறார்கள். கட்டுப்பாடற்ற அதிகாரம் தங்களுக்கு இருப்பதாகவும், யாருக்கும் விடை சொல்லத் தேவையில்லை என்றும் அவர்கள் நினைக்கிறார்கள், அரசு பற்றிய எந்த ஒரு திறனாய்வும் (விமர்சனமும்) அதுநேர்மையானதாக இருந்தாலும், அது தேச இரண்டகமாக (துரோகமாக)க் கருதப்படுகிறது. வீண் அகந்தை, ஆணவம் இவற்றுடன் திறமையின்மையும் சேர்ந்து கொள்ளும்போது, அரசின் செயல்பாடு அறிவுக்கு விடைகொடுத்து விடுகிறது".

இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி நிகழ்ச்சிச் சிக்கலில் செயலலிதாவைச் சாராய 'உடையார்' கோடி கோடியான உருபாத் தாள்களில் குடமுழுக்கே (அபிஷேகமே) செய்ததாக பேசிக் கொள்கிறார்கள். அதுவன்றித் 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சித்துறை உணவு விடுதிகள்' எல்லாம் உடையாருக்குச் சொந்தமாக்கப்பட்டதில் எவ்வளவோ கொள்ளையடிப்புகளாம்!

'ஸ்பிக்' செய்தியில் தொழில் முதலை ஏ.சி. முத்தையாவுக்கு ஆதரவாக அரசு சில தில்லு முல்லுகளைச் செய்யச் சொல்லி, மாவட்ட ஆட்சியாளர் சந்திரலேகாவுக்கு மறைமுகக் கட்டளை யிட்டார் செயலலிதா. ஆனால் அத் தவறுக்குத் துணைபோக அவர் மறுத்துவிட்டார். விளைவு முகத்தில் எரியம் (Acid)வீச்சு! இதுபோல் அவர் எதிரிகளுக்கும் ஒத்துழைக்காதவர்களுக்கும் கொடுத்த தண்டனை மிக மிக ஏராளம்! அதிகம்!

அண்மையில், 'பந்துவா முக்தி மோர்ச்சா' அமைப்பாளர் அக்னிவேசு என்பவர், குவாலியரில் செய்தியாளர் கூட்டத்தில் பின்வருமாறு பேசினார்.

"இந்த நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் சாராயப் பேர்வழிகளின் ஆளுமையில் உள்ளன. இந்தியத் தலைமையமைச்சர் சாராயப் பேர்வழிகளின் கூட்டாளியாகச் செயல்படுகிறார். நடுவண் அரசின் அதிகாரம் முழுமையும்—ஏன்—பல மாநிலங்களின் ஆட்சியதிகாரம் கூட—சாராயக் கும்பல்—ஊழல் பேர்வழிகளின் கைகளில் சிக்கியுள்ளது" என்று கூறியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தமிழக அரசுக்கும், முதலமைச்சர் செயலலிதாவிற்கும்— முழுமையும் இல்லையென்றாலும்,—முக்கால் பங்காவது நன்கு பொருந்தும் என்றுதான் நாம் நினைக்க வேண்டியுள்ளது. இல்லையெனில், ஆட்சிக்கு வருவதற்கு முன்னும் வந்த புதிதிலும் தடபுடலாக மலிவு மது விற்பனையைத் தாக்கிப் பேசி, தமிழ்நாடு முழுவதும்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

எங்கெங்கும் விடுதலை வேட்கை!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

ஐரோப்பாக் கண்டத்தின் இனங்கள் பலவும் விடுதலை பெறுகின்ற காலமிது. பலவாண்டுக் காலமாகக் கிழக்கு ஐரோப்பாவிலும், உருசியப் பேரரசிலும் அடிமைப் பட்டுக் கிடந்த பல்வேறு இனங்கள் இன்று தன்னுரிமை பெற்றுத் தன்னாட்சி நடத்தும் நல்ல காலமிது. ஆயிரமாண்டுகளுக்கு மேலாக தமக்கென நாடொன்று இல்லாமல் துருக்கியிலும், உருசியாவிலும் அடிமைப்பட்டுக் கிடந்த ஆர்மேனியர் (Armenia) இன்று தன்னுரிமை பெற்றுத் தமக்கென ஒரு நாடமைத்துத் தங்களைத் தங்களாகவே ஆளுகின்ற காலமிது. நூறு ஆண்டுகளாக உருசிய சார் (Tsar) மன்னர்களின் படைவலியால் அடிமைப்படுத்தப்பட்டு, கடந்த ஆண்டுவரை உருசியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்த உக்ரேனியர் (Ukrania) இன்று விடுதலை பெற்றுத் தமக்கென ஒரு நாடமைத்து விடுதலை துய்க்கும் காலமிது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் உருசிய ஆளுநன் இசுடாலினால் (stalin) அடிமைப்படுத்தப்பட்ட இலத்துவேனியர் (Lithuania) விடுதலை பெற்றுக் களிக்கும் காலமிது.

உடைக்கப்பட்ட உருசியப் பேரரசில் மட்டுமன்று, கிழக்கு ஐரோப்பாவின் பிறநாடுகளிலும் கூட, அடிமைப்பட்டுக் கிடந்த இனங்கள் பல விடுதலை பெற்றுப் பேருவகை எய்துகின்றன. செக்கோசுலோவிக்கிய நாட்டில் "செக்" இனம், "சுலோவக்" இனம் என இரண்டு இனங்கள் வாழ்ந்து வந்தன. அண்மைக் காலத்தே சுலோவக் என்ற சிறுபான்மை இனம் செக்கோசுலோவாக்கிவிலிருந்து பிரிந்து தமக்கென ஒரு தனி நாட்டை அமைப்பதென கருத்தறிவித்தனர் (ஒப்போலை இட்டனர்). செக்கோசுலோவாக்கிய நாட்டின் குடியரசுத் தலைவர் அந்த ஒப்பளிப்புக்கு முன் "பிரிவினருக்கு" எதிர்ப்புத் தெரிவித்தாரெனினும், சுலோவக் மக்கள் "விடுதலை வேண்டும்" என்று பெருவாரியாக ஒப்பளிப்புக்கு—விருப்பத்துக்கு—மதிப்பளிப்பதாகக் கூறினர். சுலோவக் இன மக்கள் விரைவிலேயே தமக்கென ஒரு நாட்டை அமைப்பதாக இருக்கின்றனர்.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள மற்றுமொரு நாடு யுகோசுலாவியா இங்கு "செர்ப்", "கிரோயட்" மற்றும் "பாசுனியர்" என்ற இனங்கள் வாழ்ந்து வந்தனர். செர்ப் இனத்தாரின் எண்ணிக்கை மற்ற இனத்தாரின் எண்ணிக்கையை விட அதிகமாகையால், இவ்வினம் பிற இனங்களின்மேல் வல்லாண்மை (ஆதிக்கம்) காட்டிப் பிற இனத்தாரின் பொருள் வளங்களைச் சுரண்டியது. கடந்த ஆண்டு கிரோயட் மற்றும் பாசுனிய இன மக்கள் யுகோசுலாவியாவிலிருந்து பிரிந்து (விடுதலை பெற்று) தத்தமக்கெனத் தனி நாடுகள் அமைப்பதென ஒப்போலையிட்டனர். இது இவ்வினங்களைச் சுரண்டி வாழ்ந்த செர்ப் இனத்தாருக்குப் பிடிக்கவில்லை. செர்ப் இனத்தார் இன்று கிரோயட் மற்றும் பாசுனிய இனத்தார் மீது வன்முறைகளை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு உடைந்துபோன உருசியப் பேரரசிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் வாழுகின்ற இனங்களெல்லாம் விடுதலை பெறுகின்ற நிகழ்ச்சிகள் தரும் பாடங்கள் சில. அவையாவன:

பாடம் ஒன்று:-

பிற இனங்களைச் சுரண்டி வாழ்ந்த இனம் பிற இனங்கள் விடுதலை பெறுவதை விரும்புவதில்லை. பிற இனங்களின் விடுதலை முயற்சிக்கு முட்டுக்கட்டை போடவே முயலும். இலத்துவேனிய மக்கள் 'விடுதலை' என்று ஒப்போலையளித்த பின், உருசியப் படை அவ்வின மக்கள் பலரைக் கொன்றும் அச்சுறுத்தியும் விடுதலை முயற்சிகளைத் தடை செய்ய முயன்றது. ஆனால் இலத்துவேனிய மக்கள் உருசியப் படையின் வன்முறைகளுக்கு அஞ்சவில்லை. மாறாகத் தமக்கெனப் பாதுகாப்புப் படை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். உருசியரின் படைவலிக்கு அஞ்சாமல் "நாங்கள் வேண்டுவது விடுதலையே" என்று குரல் கொடுத்து நின்ற பின்னரே, அமெரிக்கா, பிரான்சு, செர்மனி ஆகிய பிறநாடு

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழைப் புதுக்கியும், புனைந்தும் எடுத்துறவாடியும் இழுத்து முன் வைத்துமே இனமீட்பு நடவடிக்கைகள் உயர்ச்சிபெற வேண்டும் என்றால் அது பிறர்போன பாதையன்று. தமிழகச் சூழலை அமைந்தெண்ணாத பகுத்தறிவுப் பார்வையுமன்று. பாவாணர், பாவலரேறு ஆகியோர் படைத்தளித்த பாதை. கலையொழுங்குப் புரட்சி போதுமானகண்ணிய பாதை. மொழியே ஒரு வரலாறாகி நிற்பதைத் தமிழனுக்குணர்த்தி அம்மொழியையே ஊடகமாகக் கொண்டு அவன் உயர்ச்சி பெற வழியமைக்கும் பாதை; அதில் மொழிக்கு முதன்மை (தலைமை) இல்லை; முன்னிலையுண்டு. அப்பாதையிலான பயணத்தில் நாம் தேறும் முதல்படி தமிழனுடைய கல்வி அவனுடைய தாய்மொழியாம் தமிழின் வழியே அமைய வேண்டும். இது வரப்புயர என்னும் வாய்ப்பாட்டால் அமைந்தது. தமிழ் வழிக் கல்வி சிறந்தால் தமிழனின் வாழ்வுத் துறைகளனைத்தும் சிறக்கும். அவன் வாழ்வும் சிறக்கும் இனமும் மீட்சியுறும். (முற்றும்)

கள் அக்குரலுக்கு ஆதரவு தெரிவித்தனர். இதன் உருசியப் பேரரசு இலத்துவேனிய இனத்தின் விடுதலைக்கு ஒப்புதல் அளித்தது.

யுகோசுலாவிலும் அப்படியே. பிற இனத்தவரின் பொருள் வளங்களைச் சுரண்டி வாழ்ந்த செர்ப் இனத்தார், கிரோயட் மற்றும் பாசுனிய இனத்தாரின் விடுதலைக் குரலுக்கு மதிப்பளிக்காமல், அவர்கள் மீது வன்முறையை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் கிரோயட், பாசுனிய மக்கள் அஞ்சாமல் தொடர்ந்து விடுதலைக் குரல் கொடுப்பதைக் கண்டு, உலக ஒன்றிப்பு நாடுகளின் அவை (United Nations) செர்ப் இனத்தாரைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

செக்கோசுலாவாக்கியாவிலும் கூட, அந் நாட்டுக் குடியரசுத் தலைவர் சுலோவக் இன மக்களின் விடுதலைக் குரலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். அது தவறு, முறையற்றது என்று சொன்னார். அவ் வெதிர்ப்புகளைக் கண்டு மிரளாமல், சுலோவக் இன மக்கள் தொடர்ந்து "விடுதலை, விடுதலை" என்று குரல் கொடுத்ததாலேயே, அவர்கள் தனி நாடு அமைப்பதற்கு செக்கோசுலோவாக்கியக் குடியரசுத் தலைவர் இணக்கம் தெரிவித்தார்.

பாடம் இரண்டு—

தடைச் சட்டங்கள், பேச்சுரிமையை மறுக்கும் சட்டங்கள், சிறைத் தண்டனைகள் இன்னபிற அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல், கொண்ட கொள்கைக்காக எத்துயரையும் ஏற்று நிற்கும் அரசியல் தலைவர்களே விடுதலை பெற்ற நாட்டின் வருங்கால ஆளுநர்களாக முடியும். தம்மை அடிமைப் படுத்தி ஆளுகின்ற இனத்துக்கு முந்தானை விரித்துக் கொடுக்கும் காட்டிக் கொடுப்பான்கள் விடுதலை பெற்ற நாட்டில் வெறும் செல்லாக் காசுகளாக, வீசி எறியப்பட்ட எச்சில் இலைகளாக இருப்பர். செக்கோசுலாவாக்கியாவின் கவல் (Hovel) எனும் நாடக ஆசிரியர் உருசியப் பேரரசு தம நாட்டின்மீது கொண்ட வல்லாளுமையை எதிர்த்துப் பேசியதற்காகப் பலமுறை சிறையிலடைக்கப்பட்டார். உருசிய வல்லாளுமை ஒழிந்த செக்கோசுலாவாக்கியாவின் முதற் குடியரசுத் தலைவராக இவர் தெரிந்தெடுக்கப்பட்டார். உருசியாவுக்கு "ஆமாஞ்சாமி" போட்டு நின்ற பழைய அரசியல் தலைவர்களுக்கு என்னதான் நேர்ந்ததோ தெரியாது.

போலந்து நாட்டிலே உருசிய வல்லாளுமையை எதிர்த்து வேலை நிறுத்தங்களும், ஊர்வலங்களும், கூட்டங்களும் நடத்திச் சிறைப்பட்ட வாலேசா (Walesa) என்ற துறைமுகத் தொழிலாளி இன்று போலந்து நாட்டின் குடியரசுத் தலைவர். உருசியாவின் கைப்பொம்மையாயிருந்த பழைய அரசியல் தலைவர்கள் காற்றிலே பறந்துபோன சருகைப் போல இருந்த இடமே தெரியவில்லை.

1940-வாக்கில் செர்மனி பிரான்சு நாட்டை அடக்கி ஆண்டபோது, விச்சி என்பான் செர்மனியரின் கைப் பொம்மையாய் பிரான்சு நாட்டை ஆண்டான். பிரான்சு செர்மனியிடமிருந்து விடுதலை பெற்றபின் இந்தக் காட்டிக் கொடுப்பான் மண்ணோடு மண்ணானான். ஆனால் செர்மனியின் ஆளுகையை எதிர்த்து விடுதலைப் படையொன்று திரட்டிப் போர்க் கருவியேந்திப் போராடிய டிகாலே பிரான்சு நாட்டின் குடியரசுத் தலைவரானார்.

வங்காள தேசத்திலே என்ன நடந்தது? வங்காளத்தை மேற்குப் பாகிசுத்தானியரின் கைப் பொம்மையராய் ஆண்ட காட்டிக் கொடுப்பான்கள், வங்காள விடுதலைக்குப் பின் சின்னாபின்னமாய்ச் சிதறிப்போயினர். மேற்குப் பாகிசுத்தானியரின் வல்லாளுமையை எதிர்த்துப் போராடிப் பலமுறை சிறைசென்ற அரசியல்தலைவர் இரகுமான் விடுதலை பெற்ற வங்காளதேசத்தின் குடியரசுத் தலைவரானார்.

பாடம் மூன்று—

"விடுதலை பெற்ற தனிநாடு வேண்டுமா?" என்ற ஒப்போலை(வாக்களிப்பு) அண்மைக் காலங்களிலே நடத்தப்பட்ட விடங்களிலெல்லாம், அடிமைப்பட்டு கிடந்த இனங்கள் "விடுதலை வேண்டும்" என்றே ஒப்பளித்தன. இலத்துவானிய இனம், உக்ரேனிய இனம், ஆர்மேனிய இனம், குரோயட் இனம், பாசுனிய இனம், சுலோவக் இனம் என்ற எல்லா இனங்களும், ஒன்று தவறாமல் 'விடுதலை வேண்டும்' என்றே ஒப்பளித்தன. பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனங்களைப் பொருள் நிலையில் சுரண்டியும், மொழி-கலை-பண்பாட்டு அளவில் கீழ்ப்படுத்தியும் சிறுபான்மை இனங்களின் வருங்காலத்தைக் கீழ் நிலைப்படுத்துவதைத் தவிர்க்கும் ஒரே வழி விடுதலையே என்பதை அடிமைப்பட்ட சிறுபான்மை இனமக்கள் நன்கு அறிந்திருந்தனர்.

இவ்வாறு சிறுபான்மை இனங்களுக்குத் தன் வருங்காலத்தைத் தீர்மானிக்கும உரிமை (தன்னுறுதி உரிமை,(சுயநிர்ணய உரிமை) (self determination) அளிக்கப்பட்ட போதெல்லாம், மக்கள் "விடுதலை வேண்டும்" என்று ஒப்போலை போட்ட(வாக்களித்த) நிலையைக் கண்டுதான், தமிழினத்தையும் இந்தியத் துணைக் கண்டத்தின் பிற இனங்களையும் அடிமைப் படுத்தி, அவர்தம் பொருள் வளங்களைச் சுரண்டி வாழுகின்ற இந்தி பேசுகின்ற இனம்—அந்த இந்திப்பேசுகினறவட இந்தியரின் வல்லாண்மைக்கு (ஆதிக்கத்துக்கு)அடங்கிய இந்திய அரசு (தில்லி அரசு) தமிழர் மற்றும் பிற இனத்தவருக்குத் தம்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம் பார்க்க)

முன்னிதழ்த் தொடர்ச்சி: தொடர்: 2

தமிழின அடையாளச் சிக்கலும் தமிழ்ப் பயிற்று மொழியும்!

கா. செ. தமிழடியான் க.இ.
துணைச் செயலாளர்
தூயத் தமிழ் ஆய்வியக்கச் செயலகம், உ. த. மு. க.

இனி குலமாக அன்று கொள்ளப் பெற்ற சாதிகள், சாதியப் பகுப்புகள் தமிழர்க்குரியன. அப்பெயரனைத்தும் தமிழ்ச் சொல்லேயாதல் சான்று. ஆனால் அவை தொழிற்பகுப்பு அடிப்படை கொண்டவை. கொள்ளவும் கொடுக்கவும் அவற்றால் முடிந்தது. இதனைப் பிறப்படிப்படையாக்கி இழிவு சிறப்புக் கற்பித்து, ஒரு சாதியார் இன்னொருவரைப் பகைத்துப் பிரியும் வண்ணம் கதையும் உரையுமாய் கட்டிப் பரப்பித் தமிழினத்தைப் பிளந்து, கூறு கூறாய்ப் பிரித்தது பார்ப்பனத் திருவிளையாடல்களே. பின்னும் இச் சாதியப் பகுப்புகள் நூல் வருண நெறியாகத் தொகுக்கப் பெற்றுச் செறிவூட்டப்பட்டன. இதுபோன்ற நூல் வருண பாகுபாடுகள் உலகளாவி இருந்தன. பிளேட்டோவின் தங்கம், வெள்ளி, பித்தளை, செம்பு—என்பதான மாந்தப் பாகுபாடுகள் இந்தியாவிலுள்ளது போலப் பிறப்பின் அடிப்படையில் முரட்டுத்தனமாக அமைந்ததில்லை. எக் கூறில் பிறந்தாலும் ஆளத் தகுந்தவன் என்பதே பிளேட்டோவின் பார்வை. ஆனால் இந்த மண்ணில்தான் இனவெறுப்பாளரான பார்ப்பனரால் (Racial fenaties, Bramins are communally communal) காணாமை, தீண்டாமை போன்ற கொடுமைகள் கட்டிக் காக்கப் பெற்றன. பிறப்பும் பிழைப்பும் ஒரு பாற்கிளவியெனும் கருத்தாக்கமும் செயலுருவம் பெற்றது. சாதிகள் முன்னர் சூழ்ச்சியால் நின்றன. அரசியல் பொருளியல் காரணிகள் அவற்றிற்கு இன்று நிலைபேறளித்தன.

ஆங்கிலர் வருகைக்கு முன்னே வெகு மக்களுக்குக் கல்வி இந்நாட்டில் மறுக்கப்பட்டது. பல்யாகசாலை நாட்டப் பெற்றது. பார்ப்பனர் வேதங் கற்க ஏந்துங்கள் செய்யப்பெற்றன. ஆனால் பொதுக் கல்விக் கூடங்கள் நடத்தப் பெற்றதாய் வரலாற்றில் குறிப்பில்லை. என்றாலும் கல்வியின் பயன் உணரப்பட்டும் உரைக்கப்பட்டுமே வந்துள்ளது. இந்தியா விடுதலைபெற்று 45 ஆண்டுகளுக்குப் பின்புங்கூட இந்த நாட்டில் கல்வி இன்னும் உரிமையாக்கப் பெறவில்லை; நயப்பாகவே வைக்கப்பெற்றுள்ளது. மொழிவழி நாட்டுப் பிரிவினை 1953-இல் நடைபெற்றது. அவ்வந்நாட்டு மொழியே ஆட்சி மொழியாகி இப்போது அலுவல் நடைபெறுகிறது. கல்வியிலும் பட்ட ஆய்வுப் படிப்புவரை அம்மாநில மொழியே பயன்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டிலோ பாடமொழியாகவோ பயிற்று மொழியாகவோ தமிழ் இன்னும் வைக்கப்பெறாது அயல் மொழியான ஆங்கிலமே அரசோச்சுகிறது. நிலைமையில் பெரிய மாற்றமில்லை. அன்று பொதுக் கல்வி மறுக்கப்பட்டது. இன்று தமிழ்வழிக் கல்வி மறுக்கப்படுகிறது. உலகத்துத் துன்பியல் கதைகளிலெல்லாம் தமிழ் நாட்டின் கதை மிகத் துன்பமானது.

மீட்சிபெற விரும்பாதவனைப் பிறர் மீட்பது முடியாது என்றால்தான் எப்படியெப்படி, எதெதனால், எங்கெல்லாம் தளைப்பட்டிருக்கிறோம் என்பதறிந்து, ஒருவன் அவற்றிலிருந்து விடுபட முனைதல் வேண்டும். அப்போதுதான் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பொருளிருக்க முடியும். இனி 20-ஆம் நூற்றாண்டுத் தொடக்கம் முதல் நடந்த மீட்பு நடவடிக்கைகளையும் அவை ஏற்படுத்திய தாக்குறவையும் இக்கால் சீராய்வு செய்வது தேவை கருதிய ஒரு செயலாகும்.

அவையும் மூன்று தளங்களில் நடந்தன.

1) மொழி மீட்பு அல்லது மொழித் தூய்மை—பண்புக் கூறுகளால் தனித்தமிழ் இயக்கம்.

2) இனமீட்பு: பார்ப்பன மேலாண்மையிலிருந்து விடுபடல். தன்மதிப்பு இயக்கம்.

3) நாடுமீட்பு —தன்னாட்சியும் தனியாட்சி அற்றதெனினும் தமிழறிந்தோர் தலைமையில் அமைந்த அரசு.

மொழி மீட்பு, மொழித்தூய்மை நடவடிக்கைகள் தமிழறிஞரால் செயல் தளங் கண்டன. அவற்றின் விளைவு வெகு மக்களிடமிருந்து தமிழை விளக்கிக் கொண்டுபோய் வேளாளர் நாகரிகமாக்கி, இந்து சமயத்தின் ஒரு பிரிவான சிவனியமும் தமிழும் ஒரு பொருட் கிளவி என்பதான கருத்தாக்கத்தைத் தோற்றுவிக்க நல்லதொரு காட்டாய் அது அமைந்தது. மொழி மீட்பு, மொழித்தூய்மை நடவடிக்கைகள், பாவேந்தன், பாவாணர், பாவலரேறு போன்றோரால் வேறொரு தளத்திற்கு எடுத்துச் செல்லப்பெற்றுச் சரியான திசையில் வினையழுத்தம் பெற்றுச் சிறப்பது இக்கால நடப்பு. இந்த மொழித் தளத்திலும் தந்தை பெரியாருடைய தாக்குறவு

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம் பார்க்க)

செயலலிதாவின் ஆரவார ஆடம்பர வருகைச் செலவுகள்! பொதுமக்கள் பணம் பாழாகிறது!

கடந்த அக்டோபர் மாதம் 21-ஆம் நாள் சிவகங்கையில் ஓர் அரசு விழா நடைபெற்றது. அதற்காக முதலமைச்சர் செயலலிதா வானூர்தி வழி மதுரை நகருக்குச் சென்று, அங்குள்ள அரசு விருந்தினர் மாளிகையில் ஓரிரண்டு மணிகளே தங்கி ஓய்வெடுத்துக் கொண்டு, பின் அங்கிருந்து மகிழுந்து வழியாகச் சிவகங்கை செல்வதாக ஏற்பாடு.

அடேயப்பா! இந்த ஏற்பாட்டிற்கென எத்தனை தடபுடல்கள்! எத்தனை ஆடம்பர ஆரவாரச் செலவு!

செயலலிதா இதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர்தான் அ.தி.மு.க. வெற்றிவிழா மாநாட்டிற்கென மதுரை சென்றிருந்தார். அப்பொழுதே அவர் இரண்டு நாள்கள் அந்த அரசு விருந்தினர் விடுதியில் தங்குவார் எனக் கருதி, அதிலுள்ள அறைகளின் தரைகளில் புதிதாக வண்ணக்கற்கள் பதிக்கப்பட்டன. அறைகளுக்கு வெளிர் மஞ்சள் வண்ணம் பூசப்பட்டது. திரைச்சீலைகள், கதவுகள் உள்பட அனைத்தும் புதியனவாக மாற்றப்பட்டன. பழைய குளிரூட்டும் கருவிகளை மாற்றிவிட்டுப் புதிய குளிர்பதனக் கருவிகள் பொருத்தப்பட்டன. கூட்டம் நடத்துவதற்கான அரங்க அறையில் புதிதாய்க் குளிர்பதன ஏற்பாடு செய்யப்பட்டது. மாளிகையின் வெளிப்புறச் சுற்றுச்சுவர் இடித்துப் புதிய வடிவத்தில் கட்டப்பட்டது. இவற்றுக்கென மக்கள் வரிப்பணம் பல இலக்கக் கணக்கில் செலவிடப்பெற்றது.

ஆனால் மாநாட்டிற்கு வந்த ஆடம்பர முதல்வர் செயலலிதா இரண்டு நாள்களும் அந்த விருந்தினர் மாளிகைக்குள் செல்லவேயில்லை. அவர் எப்பொழுதும் வழக்கமாகத் தங்கும் விண்மீன் விடுதியிலேயே அரசுப் பணத்தில், தம் ஆடம்பரப் பரிவாரக் கூத்தடிப்புக் கும்பலுடன் தங்கிக் கும்மாளமிட்டு விட்டுச் சென்றார்.

இந்தச் சூழ்நிலையில்தான் செயலலிதா சிவகங்கை விழாவிற்காக மீண்டும் மதுரை வருகிறார் என்று செய்தி வந்தது. அரசு அதிகாரிகளும் அ.தி.மு.க. கொள்ளையர்களும் சும்மா இருப்பார்களா? உடனே வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு, அல்லது நீள்கால் சட்டைகளை இடுப்பு வரை இழுத்துவிட்டுக் கொண்டு மீண்டும் விருந்தினர் மாளிகைக்குப் படையெடுத்தனர்.

பொலிவு மாறாமல் இருக்கும் மாளிகை அறைகளில் மீண்டும் புதிதாக அதே வண்ணத்தைப் பூசி புது மெருகு கூட்டினர். அறைகளின் மேற்பரப்பும் புது முறையில் அழகு செய்யப்பட்டது. மீண்டும் கூட்டம் நடத்தும் நிகழ்ச்சி அரங்கு, குளியல் அறைகள் அனைத்தும் குளிர்பதனக் கருவிகள் புதியனவாக வாங்கிப் பொருத்தப்பட்டன. இவ்வகையான காட்சி சுவடனைகளுக்கும் மினுமினுப்புப் பளப்பளப்பு வேலைகளுக்கும் அரசுப் பணம் எவ்வெவ்வாறு தண்ணீராய்ப் பாய்ச்சப் பெறும் என்பது பொதுமக்களுக்குத் தெரிய வாய்ப்பில்லையன்றோ? தெரிந்தாலும் அவ் வாயில்லாப்பூச்சிகள் என்ன செய்துவிடப் போகின்றன என்பனவெல்லாம் செயலலிதா அறியாதவையா?

இம்முறை மாளிகையின் முன்புறம் வண்டி நிறுத்தப்படும் இடத்தில், தரையில் பளிங்குக் கற்கள் புதியனவாகப் பொருத்தும் பணியும் குறைவின்றி நடந்ததாம். இவ்வாறு செய்யாததால்தான் அம்மையாரின் சொகுசு வண்டி முன்பு வரவில்லை என்று அதிகாரிகள் கருதிக்கொண்டார்கள் போலும்!

மாளிகையின் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள செடிகளெல்லாம் வெட்டப்பட்டு, வண்டி வண்டியாகச் செம்மண் கொண்டு வந்து கொட்டப்பட்டுச் சமப்படுத்தப்பட்டதாம்.

இனி, அவர் 21-10-92 அன்று மதுரை வந்தபொழுது, வானூர்தி நிலையத்தில் என்றுமில்லாத அளவு வலிவான காவல் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. கட்சித் தொண்டர்கள், பார்வையாளர்கள் தனித்தனியாக நிறுத்தி வைக்கப் பெற்றிருந்தனர். பேருந்துகள், சரக்குந்துகள், மூடுந்துகள், மகிழுந்துகள் ஆகியவற்றில் கொணரப் பெற்றிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் வானூர்தி நிலையத்தில் குழுமியிருந்தனர். இவர்கள் அனைவரும் தடுப்பு வேலிகளுக்கு அப்பால் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கட்சியின் முகாமைப் பெருமகர்கள் தவிர, மற்றவர்களைக் காவலர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு மேல் செல்ல இசைவளிக்கவில்லை.

செயலலிதா வந்தபின் வலிவான காவல்துறை ஆரவாரங்கள் பாதுகாப்புடன் மதுரை சென்றார். அவரைத் தொடர்ந்து 300க்கும் மேற்பட்ட பல்வேறு ஊர்திகளிலும் மகிழுந்துகளிலும், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

வாரியத் தலைவர்கள், மாவட்ட, வட்டத் தலைவர்கள், கட்சிப் பெருமகர்கள் ஆரவாரங்களுடன் சென்றனர். அரசு பொறுப்புள்ள ஒருவர் (அவர் யாராகத்தான் இருக்கட்டுமே) ஒரு நோக்கத்திற்காக ஓரிடத்திற்கு வந்துபோகும் நிலையில், பிற அரசுப் பொறுப்புகளை ஏற்றிருக்கும் மற்றவர்களும் அவர் பின்னால் வால்கள்போல் தொடர்ந்து ஊர் ஊராகத் உலாச் சென்றுகொண்டிருப்பது எந்த வகையில் ஞாயமானது என்று எவராவது சொல்ல முடியுமா? அதனால் அரசுப் பணிகள் எவ்வளவில் தொய்வடையும் அரசுச் செலவு எவ்வளவில் கூடுதலாகும் என்பவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? மக்களின் அறியாமையையும், தலைமையைக் கண்களை மூடிக் கொண்டுக் வழிபடும் மூடநம்பிக்கையையும், தங்கள் தந்நல விளம்பரத்திற்கும் பதவி நிலைப்பாட்டிற்கும் பயன்படுத்திக் கொள்வதுதான் நயமான—நேர்மையான அரசியல் நடவடிக்கையா?

இதுவன்றி, செயல்லிதா ஆட்சிக்கு வந்ததிலிருந்து ஒவ்வோர் ஊரிலும், அவர் எந்த ஊருக்கு ஊர்வலம் சென்றாலும், அவ்வவ்வூரில் உள்ள பற்பல சவுக்கு மரத்தோப்புகள் புதியனவாக வெட்டப்படுவதும், அவை அத்தனை மரங்களும் ஒரே அளவான கட்டைகளாக வெட்டப்பட்டுச் சாலை ஓரங்களில், எத்தனைக் கற்கள் தொலைவானாலும் அவற்றில் தடுப்பு வேலிகள் போடப்படுவதும் வாடிக்கையாகி, வழக்கமாகி, அதிகாரிகளின் ஆட்சியில் உள்ள கட்சிக்காரர்களின் வாழ்க்கையாகி விட்டது. இந்தக் கொடுமையையும் கொழுப்பு நடவடிக்கைகளையும் எங்கே போய்ச் சொல்லுவது? எந்த அறமன்றத்தில் முறையிடுவது? இஃதென்ன அரசியல் நடைமுறை? "தேளுக்கு அதிகாரம் கொடுத்தால், நாழிகைக்கு ஒரு கொட்டு கொட்டும்" என்பார்களே அதுபோல, "திரைப்பட நடிகை ஆட்சிக்கு வந்தால், ஒப்பனையாளர் தலைமைச் செயலாளர்" என்றல்லவா ஆகிவிட்டது! இவர் ஒவ்வோர் ஊருக்கும் ஊர்வலம வரும் ஒவ்வொரு முறையும் வழிநெடுக ஒவ்வொரு ஐந்தடிக்கும ஒவ்வொரு முழக் குழிகள் தோண்டுவதும், அவற்றுள் ஆயிரக்கணக்கான சவுக்குக் கட்டைகளை நடுவதும், அவற்றையிணைத்துப் பல்லாயிரக்கணக்கான கட்டைகளைக் குறுக்கும் நெடுக்குமாகக் கட்டுவதும், அவை அழுமையார் வந்து போகும் வரைக்கும் ஓரிரு நாள்கள் அப்படியப்படியே கிடப்பதும், பின்பு அவற்றைப் பிரித்து எடுத்துச் செல்வதும் — இஃதெல்லாம் என்ன திமிரான வேடிக்கை என்று அந்த அம்மாளோ அவரின் காலடியில் விழுந்துகிடக்கும் அமைச்சர்களோ, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களோ இதுவரை கேட்டார்களா? இல்லையே!

இனி, வானூர்தி நிலையத்திலிருந்து அரசு விருந்தினர் மாளிகை வரை பலவிடங்களில் மிகப் பெரிய வெட்டுருவங்களும், வரவேற்பு வளைவுகளும், கட்சிக் கொடிகளும், தோரணங்களும், மிகப் பெரிய வண்ணச் சுவரொட்டிகளுமாகக் காட்சியளித்தனவாம். நெல்பேட்டை அருகே பாண்டியன் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்கள் சார்பில், இரண்டு ஒட்டகச் சிவிங்கிகள் நிற்பதுபோல் எல்லாரையும் கவரும் வகையில் மிகமிகப் பெரிய வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டிருந்தது. மதுரை அரசு விருந்தினர் மாளிகை முன்பு பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினரால் முழுவதும் மலர்களால் சுவடிக்க (அலங்கரிக்க)ப் பட்ட 30 அடி உயரமுள்ள வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இவையன்றி அரசு விருந்தினர் மாளிகை வளாகம் முழுவதும் வண்ண வண்ண மலர்கள் ஏராளமாகப் பரப்பப்பட்டிருந்தனவாம்.

இந்த நிலைகளையெல்லாம் அதிகாரிகளும் ஆட்சியாளர்களும், குறிப்பாக செயலலிதாவும் கூட கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், நெடுஞ்சாலைத்துறை, பொதுப் பணித்துறை ஊழியர்கள், செயலலிதா வரும்போது எல்லாம் இப்படிப்பட்ட பணிகளைச் செய்துகொண்டிருந்தால், அத்துறைப் பணிகள் என்னாவது என்று ஞாய உணர்வுடனும் நடுநிலை உணர்வுடனும் சிந்திக்க வேண்டாமா? இவற்றில் அவர்கள் ஈடுபட்டால் அவர்களின் இயல்பான பணி தவிர்க்கப்பட்டு, அதனால் தாக்கமடைபவர்கள் பொதுமக்கள் அல்லவா? இ'து எப்படிச் சரியாகும்? கட்சிக்காரர்களும், வேலைகெட்ட தொண்டர்களும் இவற்றைச் செய்வதே, நாட்டின் மக்களாற்றலுக்குப் பெருத்த கேடு. செயலலிதாவுக்கு இப்படிப்பட்ட ஆடம்பர ஆரவார வரவேற்புகளால் என்ன ஊதியம்? ஒப்போலை பொறுக்குவதற்கும் மக்கள் ஆற்றலை வீணடிப்பதற்கும் தவிர, மக்களுக்கோ நாட்டுக்கோ இவற்றால் என்ன பயன் என்று ஒரு நொடி சிந்திக்க வேண்டாமா? அந்த அம்மாள் தான் அப்படிச் சிந்திக்கவில்லையென்றாலும், அவருடன் உள்ள அமைச்ச மாண்பு(!)களாவது சிந்தித்து அந்த அம்மாவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டாமா?

இனி, அந்த அம்மாள் விளக்கணி (தீபாவளி) விழாவன்று; சென்னை ஆவடிக்கு வருகை தந்தார்கள்(!). அக்கால், இவர் செல்லும் வழியிலுள்ள பட்டாசுக் கடைகளையெல்லாம் மூடச் சொல்லிக் காவல் துறையினர் கெடுபிடி பண்ணியதுடன், இந்த அம்மாள் விழாவிற்குப் போய்த் திரும்பும் வரை வழியெங்கும் எவரும வெடிகள் வெடிக்கக் கூடாதென்று கட்டுப்பாடு செய்து; குழந்தைகள்,

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம் பார்க்க)

Scanned with CamScanner

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டென்றாலும், அது, தமிழ்நாட்டுக்கேயுள்ள சிறப்பு நிலையினைப் புறக்கணித்த பகுத்தறிவுப் பார்வை. அது பெரிதும் மொழி முன்னேற்றம் என்ற தளத்திலேயே அழுத்தங்கொண்டது. அதற்குக் காரணம் இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குத்தக செந்தமிழ் செழுந்தமிழ் ஆகாத, ஆக்க முனையாத வறிய தமிழ்ப் புலவர் கூட்டமே. என்றாலும் இனப்பற்றையும் நாட்டுப்பற்றையும் கொணரக்கொடுக்க வல்லது தாய்மொழிப்பற்றே என்று கருத்தறிவித்து, பிழையற்ற ஒரு வழியைப் பிறங்கடையினருக்கு அவர் காட்டிச் சென்றுள்ளார்.

இனி இனமீட்பு நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம். இதனை முன்னெடுத்துச் சென்றவர் தந்தை பெரியார் ஒருவரே. தமிழக வரலாற்றில் வள்ளுவனுக்குப் பின்னே இனம் பற்றிச் சிந்தித்த நேர்வு தந்தை பெரியாருக்கு மட்டுமே அமைந்தது. மொழி, இனம், நாடென்னுங் கூறுகளில் மொழியும் இனமும் குமுகவியல் சார்ந்தும், நாடெனபது அரசியல் சார்ந்தும் இயல்வன. அதனாலேயே இன மீட்பு நடவடிக்கைகளைத் தந்தை பெரியார் குமுகச் சீர்திருத்தத் தளத்திலேயே அமைத்துக் கொண்டார். தமிழனைச் சிந்திக்க வைத்தவரும் இன்றுள்ள விழிப்பு நிலைக்கு வேரும் வித்துமாய் அமைந்தவரும் பெரியார் ஒருவரே—அவருடைய தன் மதிப்பு இயக்கமே என்றால் மறுப்பாரில்லை. பார்ப்பன வல்லாண்மையின் அடித்தளம் அவரால் தகர்ந்து போயிற்று. பார்ப்பனர் தம் இன்றைய எழுச்சி இடிபாடுகளைச் சரிசெய்யும் ஒரு முயற்சியே என்றாலும், இனி இம் மண்ணில் அது மறுமலர்ச்சி காண வழியில்லை என்றாலும், தந்தை பெரியார் அவர்களுடைய உழைப்பு முழுப்பயனும் பெறாது போனமைக்கு இனத்தை அவர் அடையாளங் காட்டிய முறையே காரணம். அம்முடிவுக்கு அவரை இட்டுச் சென்றன அக்காலச் சூழமைவுகளே. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், என நான்கு மொழியினமும் ஒன்றிவாழும் ஒரே நாடாக—"சென்னை இராசதானி—இருந்த நேரம் அது. பார்ப்பனர் வல்லாண்மையை எதிர்த்து ஓரியக்கங்கட்டி அதில் பார்ப்பனரல்லாதாரை ஒருங்கு திரட்டச் செயல்பட்டபோது 'பார்ப்பனரல்லாதார்'—என்ற பொதுப் பகுப்புப் பயன்பட்டது. இப் பகுப்பின் மெலிமை நிலை புரிந்த போது (அஃதாவது ஒரே மொழியினத்தாராயிருந்த நான்கு தனித்தனி மொழியினராய்ப் பிரிந்தோரை, ஒரே மதத்தினராயிருந்து பலகூறு மதத்தினராய்ப் பிரிந்தோரை உள்ளடக்கிய) ஒரு பொதுப் பெயரால் அடையாளங்காட்டும் தேவை எழுந்தது. அப்போது அயலவர் கருத்தாக்கமான 'திராவிடர்' என்ற பெயர் தேர்வு பெற்று இயக்கத்தின் திசை வழியினை தீர்மானித்தது என்றாலும் திராவிடர் என்ற கருத்தாக்கம் வரலாற்றுத் தாங்கலற்றது. வடக்கே வாழ்ந்து, வந்தேறிகளால் சீரழிந்தோர் வடதமிழரேயன்றித் திராவிடர் அல்லர். ஞாயக் கட்சியைக் கட்டிக் காப்புச் செய்த அத்தனைப் பேரும் பிறமொழியினரே என்ற போதும் அவர் தவிர்த்துத் தமிழரை மட்டுமே உள்ளடக்கிய இயக்கமாக, ஞாயக்கட்சியின் திரிபாக்கமான திராவிடர் கழகத்தைக் காணமுடியா நாட்டமைவு அது என்ற யோ[illegible]ம், இவ்வாறு அடையாளங்காட்டிய முறை தன்மதிப்பியக்கத்திற்கு ஏற்பட்ட சருக்கல் என்பதினும், அது மேற்கொண்ட சரிக்கட்டல் முறை என்பதே சாலும். திராவிடர் என்ற கருத்தாக்கத்தினால் ஆட்சியும் அதிகாரமும் வாழும் வசதியும் பெற்றவர் பிறமொழி இனத்தவரே. தமிழகத்திலுள்ள நிலைத்திணைச் சொத்துகளில் செர்பாதிக்கு மேலும் இக்கால் அவரே கையகங் கொண்டுள்ளார். இந்நேர்வில் தோழர். குணாவின் தரவுகள் அப்படியே ஏற்றமையத்தககன என்றாலும், தந்தை பெரியார் அவர்கள் அவாவி நின்றன தமிழரும தமிழ் நாடுந்தாம். 1939-இல் சேலம் மாநாட்டில் வைக்கப்பெற்ற 'தமிழ் நாடு தமிழருக்கே' என்ற முழக்கமும், பின்னாளில் தமிழ்நாடு தவிர்த்த இந்திய தேசப்படத்தை திரு. ஆதித்தனாருடன் சேர்ந்து அவர் எரித்ததும் இந்த அடிமனப் படிவுகளின் விளைவே. 19-12-73-இல் தமிழருக்கு அவரிட்ட இறுதிமுறியும் தமிழ் நாடு தனி நாடாக வேண்டுமென்பதே.

இனி அந்தத் திராவிடர் என்ற கருத்தாக்கமும் 1953-ஆண்டைய மொழி வழி நாட்டுப்பிரிவினையால் பொருளற்றுப் போயிற்று. இந் நான்கு மொழியினரும் தொலைநாளில் ஓரினத்தவர் என்ற ஒரு நிலையால் மட்டுமே அவரையும் உள்ளடக்கி இயக்கங்கள் வேண்டுமென்றால் அவருக்கு முன்னரே பிரிந்த வேறு சில மொழிப் பிரிவினரை- (கூ, கோந்த், அரசமகல், ஒரோவன, குடகம், துளுவம், துதவம், கோத்தா.) உள்ளடக்கியே இயக்கங்காணவேண்டும். இ'து ஆகக்கூடியதோ அறிவுடைமையோ அல்ல. தவிரவும அ'து இயங்கியல் மறுப்புச் சிந்தனையுமாம். இது நிற்க.

இனி, நாட்டு மீட்புப்பற்றி பார்ப்போம். இந்திய நாடு விடுதலை பெற்ற 20 ஆண்டுகளுக்குப் பின்னால் தமிழ்நாடு தமிழறிந்தோர்—ஆட்சிப் பொறுப்பில் வந்தது. இதுவுங்கூட தந்தை பெரியார் அவர்களுடைய தொண்டின் காரணமாய் ஓரளவு வடிவங்கொண்டிருந்த குமுக மாற்றத்தால் விளைந்தது. அவ்வாட்சியும் தமிழ்மொழி, இன மீட்புக்கும் மேன்மைக்கும் இன்றுகூடச் செய்யாத வெறுமையாலும், நாட்டளவில் நிற்கவேண்டிய அரசியலை மொழி, இனம் தளங்களுக்குத் தந்நலங் கார்ணமாக எடுத்துச் சென்ற நேர்வுகளாலும், அவர்க்குள்ளே எழுந்த முரண்பாடுகளாலும் மொத்தமாய்க் கெட்டழிந்தது. முறையான குமுக மாற்றத்திற்கு

Scanned with CamScanner

முன்னே வரும் அரசியல் மாற்றம் இம் மண்ணில் வேர்கொள்ள முடியாதென்பதற்கு இன்றைய நாட்டு நிலை நல்லதொரு காட்டாகும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரெல்லாரும் தமிழரல்லர்; தமிழ்நாட்டில் வாழ்பவர் எல்லாமுந் தமிழரல்லர் என்று முன்னர் கண்டோம். இதை மறுத்தால் பார்ப்பனரையும் தமிழரென்று நாம் ஒப்பவேண்டி வரும். பார்ப்பனர் இக்கால் ஆரியரல்லர்; அதேபோது அவர் தமிழருமல்லர். ஆரியத்தமிழர் இனவழிச் சிறுபான்மையர். ஆங்கில இந்தியர் போலும் ஒட்டினத்தவர். தமிழகத்தில் வாழும் பிறமொழியினர்—இம்மண்ணுக்கும் அவர்க்குமுள்ள தொடர்பு காலப்பழமை கொண்டதெனினும், இங்கே மொழிவழிச் சிறுபான்மையினரே. அந்த அளவிலேயே அவரிருவரும் பொறுத்துக் கொள்ளப்படுவர். சட்டப்படியான நய்ப்புகளை அவர் பெறுவர்.

மொழி, இனம், நாடு என்ற நேர்ச் சுற்றிலும், நாடு, இனம், மொழி என்பதான எதிர்ச் சுற்றிலும் மாந்த வினத்தை அடையாளங்கண்ட முறையே இதுவரை ஆகிவந்ததென்பதும் முன்னர் சுட்டிக் காட்டப்பெற்றது. இவற்றுள் தமிழன் நேர்ச்சுற்றில் அடக்கப்பட்டு, அது தொடர்ந்த கருத்தாக்கங்களே இதுவரை மனத்தில் பதிவிக்கப் பெற்றன. பாவேந்தனுங்கூட இக் கருத்தாக்கங் கொண்டொழுகியவனே. **'ஒருமொழியால் ஓரினமாம். அவ்வோரினமே ஒரு நாடாம்'**—என்றே அவனும் பாடுவான். இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும் இக் கருத்தியலடிமைகளே. அதனாலேயே— அதாவது மொழி தலைமைப்படுத்தப் பெற்றதாலேயே—தமிழை வழிபட்டு அதன் வளர்ச்சிக்குத் துணைபோகாது நின்றமைந்தவர். புகழ்ந்தவை போற்றிச் செயல்—தமிழர்தம் வாழ்வியல், இதையும் புலன் மாற்றிப் புகழ்ந்தும் போற்றியும் ஒரு துறைக்கோவையே பாடி முடித்துச் செயல்படலாயினர். எனவே நாம் இனியொரு கருத்தாக்கஞ் செய்தல்வேண்டும். அஃது இனத்தைத் தலைமைப்படுத்தி இனம், மொழி, நாடு என்ற படிநிலையில் அமையவேண்டும். அந்த வட்டத்தில் அமையும்போதுதான் செயல்தெளிவு ஏற்படமுடியும். இது தமிழ்நாட்டுக்கேயுரிய சிறப்பு நிலை. தந்தை பெரியார் செய்ய முனைந்தது இதுதான். ஆனால் மொழித்தளத்தில் போதிய துணைவர் அவருக்கமையவில்லை. அதனாலேயே அப்புலத்தை நீர்ப்பாய்ச்சலாக அவர் நெட்டித்தள்ள நேர்ந்தது.

இனமீட்பு நடவடிக்கையில் நாம் எதிர்கொள்ள வேண்டிய தடைகள் ஏராளம். அதற்கு நாம் ஆயத்தமாகவே இருக்கவேண்டும். இனத்தால் ஒன்றான தமிழன், சமயத்தால், சாதியால், அரசியல், பொருளியல் காரணிகளால் பிளந்தும் பிரிந்தும் நிற்கிறான். எக்கூறாய்ப் பிரிந்து நின்றாலும் அக் கூறுக்குண்டான கருந்தியலால் அவன் அடிமை. இந்த அடிமை களையவிழ அவன் கருத்தியல் மாற்றம் அல்லது சீர்மை பெறவேண்டும். அதை உருவாக்குதல் எழுத்தாலும் உரையாலும் தொடர்ந்து செய்தி பரப்பலாலும் முடியும். அதற்குதவுவது மொழித்தளமே. இந்த மொழித்தளத்தில் இன்று அவனுக்குத் தன்னுறுதி இல்லை. தமிழ், பாடமொழியாகவோ பயிற்றுமொழியாகவோ இன்று இல்லை. தமிழகத்தில் ஆட்சிமொழி தமிழ்தான். ஆனால் பாடமும் பயிற்சியும் தமிழில் இல்லாதபோது, அது எப்படி ஆளும்? சாதி ஒழிந்தது எனச் சட்டஞ்செய்யாமல், தீண்டாமை ஒழிந்ததுஎனச் சட்டஞ்செய்த காரறிவு இங்கும் செயல்படுகிறது. காரணமின்றிக் கருமியம் இல்லையென்பது நடந்த நிகழ்ச்சியின் ஞாயப்பாடு. கருவியின்றிக் கருமியமில்லையென்பது. நடக்கப்போகும் நிகழ்ச்சிக்கு வரையறைமொழி ஒரு கருவி அதனை வைத்தே—அஃதாவது

(3-ஆம் பக்கம் பார்க்க)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர் சிறுமியர்கள், பெரியோர்கள் இளைஞர்கள் ஆகியவர்களின் வேடிக்கை மகிழ்ச்சியைக் கெடுத்ததுடன், வணிகர்களும் பேரிழப்பு அடையுமாறு செய்து விட்டனர்.

பழங்காலத்தில் மதம்பிடித்த யானை கட்டவிழ்த்துக் கொண்டு வீதிகளில் தறிகெட்டு வருகின்றதென்றால் அரசுக் காவலர்கள் தெருவுகளில் முன்னோடி, "மதயானை வருகிறது; எல்லாரும் வீடுகளில் ஓடி ஒளிந்துகொள்ளுங்கள்" என்று பறையடித்து அறிவித்துக் கொண்டே இருப்பார்கள்.

அதுபோல, கடுவெ(கு)ளிச் சித்தர் என்று ஒருவர் இருந்தார். அவர் தெருவிலோ பாதைகளிலோ சென்றால், வழியிலுள்ள செடி கொடி ஆடு, மாடுகள், மக்கள் எல்லாரையும் கல்லெடுத்தும் அச்சுறுத்தியும் அடித்துக் கொண்டும் செல்வார் என்று கேள்விப்பட்டிருக்கலாம். **"கடுவெ(கு)ளிச் சித்தர் போன வழி, காடுமேடெல்லாம் தவிடுபொடி'** என்று அவர் பற்றிய ஒரு பழமொழியும் வழங்குகிறது.

இவ்வாறு, மதயானை போலும், கடுவெ(கு)ளிச் சித்தர் போலும், **'செயலலிதா அம்மா செல்லும்வழிச் செல்வோர்க்கெல்லாம் மண்டை வலி'** என்று ஒரு புதுமொழியே தோன்றிவிட்டது. இது அவர் மறைவுக்குப் பின்னும் வழங்கி வரும் வரலாறாகி விடும் என்பதை இனிமேலாகிலும் அவர் இதுபோலும் மக்கள் கொடுமைக்களாகும் ஆரவார ஊர்வலங்களைத் தவிர்த்துக் கொள்ளுவாரா? அல்லது யாருக்கும் அடங்காப் பிடாரியாகத் தம்மை நிலைப்படுத்திக் கொள்வாரா என்பதைக் காலந்தான் நமக்குச் சொல்லுதல் வேண்டும்.

—குத்தீட்டி

Scanned with CamScanner

இந்தியக் குடியரசுத் தலைவருக்கு இதுவா வேலை?

"காஞ்சி சங்கராச்சாரியின் நூற்றாண்டு விழாக் குழுவின் காப்பாளராக இருக்க இந்தியக் குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மா இசைவளித்து விட்டார்."

—இது முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்டராமனின் அறிவிப்பு.

இந்திய நாட்டில் எத்தனையோ மதங்கள். அவற்றில் ஒன்று பார்ப்பன மதம். அதை வேத மதம்—வைதீக மதம்—சனாதன மதம் என்று அறிஞர்கள் குறிப்பர். ஆனால் பார்ப்பனர்கள் அதை இந்து மதம் என்று குறிப்பிட்டுக் கும்மாளமிடுவார்கள்.

நூற்றுக்கு மூன்று இந்தியர்க்கு உரிய பார்ப்பன இந்து மதத்தை நூற்றுக்குத் தொண்ணூற்றுஏழு பார்ப்பனரல்லாதார்க்குரியதாக சித்தரிப்பது ஓர் அடிப்படை ஏமாற்று!

வேதத்தை அடிப்படையாகக் கொண்ட மனுசுமிருதி என்னும் திரிபுமாற்றத்தை (விபரீதத்தை) அடிப்படையாகக் கொண்ட—வர்ணாசிரம மெய்ம்மம் (சித்தாந்த)மென்னும் சமநிலைப் பகைக் கருத்தை (சமத்துவ விரோதத்தை) அடிப்படையாகக் கொண்ட—இந்து மதத்திற்கும் சைவராய், வைணவராய், சாக்தராய், சீக்கியராய், சமணராய், தனித்தனிச் சிறு தெய்வ வழிபாட்டுக்காரராய் இருக்கும் எண்ணிலாத இந்தியர்களுக்கும் எந்தத் தொடர்பும் (சம்பந்தமும்) இல்லை.

இவர்களல்லாத இசுலாமியர்கள், கிறித்துவர்கள் மற்றும் பலர் உண்டு.

மேலும் பவுத்தராய், பெரியார் கொள்கையினராய், மார்க்சியர்களாய், அம்பேத்கரியர்களாய் இருக்கும் எண்ணற்ற இந்தியர்கள் இங்கே மதஞ்சாராத கடவுள் மறுப்பாளர்(நாத்திகர்)களாய் வாழ்கிறார்கள்.

அரசியல் தளத்தில் இவ்வளவு இந்துக்களல்லாத இந்தியர்கள்—அஃதாவது இந்துக்களான மூன்று விழுக்காட்டுப் பார்ப்பனரைத் தவிர்த்த மற்றவர்கள் தொண்ணூற்றுஏழு விழுக்காட்டினர் இருக்கிறார்கள்.

நம் அனைவரின் அரசியல் படிநிகராளி (பிரதிநிதி)தான் இந்தியக் குடியரசு தலைவர்.

மதச் சார்பற்ற நம் அரசியல் சட்டத்தின் அடிப்படையில் இப்பெரிய பதவியை ஏற்றிருக்கும் முனைவர்(டாக்டர்)சங்கர்தயாள் சர்மா அவர்களுக்கு இப்போது ஒரு புதிய பதவி கிடைத்திருக்கிறது.

இந்தியாவிலுள்ள 25 மாநிலங்களில் ஒரு மாநிலம் தமிழ்நாடு. இந்தத் தமிழ்நாட்டில் உள்ள எத்தனையோ நகரங்களில் ஒரு நகரம் காஞ்சிபுரம். அந்தச் சிறிய நகரத்தில் ஏதோ ஒருமூலையில் ஒரு சோற்று மடம். அதற்குப் பெயர் காஞ்சி காமகோடி பீடம். அந்தப் பீடத்தின் தலைவர் திரு. சந்திரசேகரர். அவருக்கு 1993 மே மாதம் நூறு அகவை(வயது)ஆகிறதாம்.

பல பிரிவுகளான பார்ப்பனர்களில் ஒரு பிரிவான தமிழ் நாட்டு சுமார்த்தப் பார்ப்பனர்கள், மொத்த இந்திய ஜனத்தொகையில் 0.00003 விழுக்காடு கூட இருக்கமாட்டார்கள். இந்த 'மகா' பெரிய மக்கள் கூட்டத்தின் மாபெரும் தலைவர்தான் இந்தச் சந்நியாசி சங்கர்—அஃதாவது சங்கர் ஆச்சாரியார் எனப்படும் திரு. சந்திரசேகர சரசுவதி.

இவருடைய நூற்றாண்டு விழாவை மிக ஆடம்பரமாக (கோலாகலமாக)க்கொண்டாட முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர் வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதாம்.

இந்த 0.00003 விழுக்காட்டு சுமார்த்தப் பார்ப்பனர்களின் தலைவருக்கான நூற்றாண்டு விழா குழுவிற்கு முன்னாள் குடியரசுத் தலைவராயிருந்து ஓய்வுபெற்ற பார்ப்பனர் தலைவராவதில் நமக்கொரு மறுப்புமில்லை.

குடுமியும் குடுமியும் கூடிக்கொண்டு கும்மாளமிடட்டும்! இது அவாளின் 'அந்தப்புர'ச் செய்தி (விவகாரம்)! நம் கொள்கை மூக்கு அங்கு நுழைய வேண்டிய தேவையில்லை.

ஆனால் இந்த ஓய்வுபெற்ற (ரிடையர்டு) குடுமி— அஃதாவது திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவித்துள்ளரே—அதுதான் நம் கவனத்தைக் கவர்கிறது.

இந்தப் பாழாய்ப்போன விழாவின் பாடைத்துன்ப(பாடாவதி)க் குழுவிற் (கமிட்டிக்)குத் தற்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் சங்கர்தயாள் சர்மா காப்பாளராக இருக்கவும், பெரு முதலாளிய ஜி.பி.பிர்லா, முதலாளியத் தரகர் பல்கிவாலா, தமிழகப் பணமுதலை சிவசைலம் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் இருக்கவும் இசைவு அளித்து விட்டார்களாம்.

18, 19 அக்டோபர் 1992 பக்கல் (தேதி) களில் அந்த திரு.சங்கரின் அரிய புகைப்படங்கள்,

ஓவியங்கள் அடங்கிய கண்காட்சி தேச உடைமையாக்கப்பட்ட இந்தியன் ஓவர்சீசு வைப்பகச் சார்பில் நடைபெற்றது,

மதச் சார்ப்பற்ற இந்திய நாட்டின் மிகப்பெரிய அரசியல் பதவியான குடியரசுத் தலைவர் பதவியிலிருக்கும் ஒருவர் 0.00003 விழுக்காட்டுப் பார்ப்பனர்களின் தலைவரான மத'வாதி' சங்கரின் நூற்றாண்டு விழாக் குழுவிற்குக் காப்பாளராக இருக்க இசைவு தருவது (சம்மதிப்பது) சட்ட 'விரோத'த்திற்குப் புறம்பானது அல்லவா?

இவர் இந்திய நாட்டின் குடியரசுத் தலைவரா? அல்லது 0.00003 சுமார்த்தப் பார்ப்பனரின் தனி நாட்டுக்குக் குடியரசுத் தலைவரா?

குடியரசுத் தலைவர் பெறுகிற சம்பளமும் நுகர்கிற வசதிகளும் நூற்றுக்குத் தொண்ணூற்றேழு இந்தியர்களான இந்துக்களல்லாத உழைப்பாளர்கள் அளிக்கும் வரிப் பணமா? அல்லது அந்த 0.00003 சுமார்த்தப் பார்ப்பனர் கொட்டிக்கொடுக்கும் கப்பமா?

தேச உடைமையாக்கப்பட்ட வைப்பகப் பணத்திலிருந்து சங்கர் படக் கண்காட்சி நடத்துவது தகுமா?

இப்படித்தான் முன்னொருமுறை நடந்தது. குடியரசுத் தலைவராயிருந்த திரு. இராதாகிருட்டிணன் அவர்கள் 1963-சூன் 28-இல் மதுரை கோயில் குடமுழுக்கு விழாவிற்கு வர அணியமானார். நம் தளபதி குத்தூசி குருசாமி அவர்கள் மதச்சார்பற்ற நாடான இந்தியாவின் குடியரசுத் தலைவர் ஒரு மதத்தின் விழாவிற்கு வரலாமா என அப்போது தன்மதிப்பு(சுயமரியாதை) இயக்கம் என வழங்கப்பட்ட நம் பகுத்தறிவுச் சமநெறி இயக்கச் சார்பில் வழக்குத் தொடர்ந்தார். விளக்கம் தெரிந்தவரான திரு. முனைவர். இராதாகிருட்டிணன் குடமுழுக்கு நிகழ்ச்சிக்கு வருவதைத் தவிர்த்து விட்டார்.

சமநெறி(தர்ம)ப் பகைவர்களான பணமுதலைகள் பிர்லாவும். சிவசைலமும் பங்கேற்று நடத்தும் சங்கர் விழாவிற்குக் குழுக் காப்பாளராயிருக்க இசைவளிக்கும் தற்போதைய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு நாமளிக்கும் வேண்டுகோள்(விண்ணப்பம்)இதுதான்.

"நீங்கள் அனைத்து இந்தியர்க்கும்தான் குடிரயசுத் தலைவர். பார்ப்பனருக்கு மட்டுமன்று. இ'து இந்திய நாடு இந்து நாடன்று. ஒரு சிறு கூட்டத்தின் தலைவர் காஞ்சி சங்கர் விழாக் குழு முதலாளிய முதலைகளால் சமநெறிச் சமநிலை கெதிராக நடத்தப்படுவது. அதில் குடிதரசுத் தலைவர் காப்பாளராவது சட்டப் புறம்பானது. இதைத் தாங்கள் தவிர்க்க வேண்டும். இந்திய மக்கள் எல்லாருக்கும்தான் தாங்கள் குடியரசுத் தலைவர் என்பதை மெய்ப்பிக்க வேண்டும்,

இல்லையென்றால் தாங்கள் குடியரசுத் தலைவர் பதவியை விட்டு விலகி வெறும் குடுமியாகிவிட வேண்டும்.

வசதி உள்ள தோழர்கள் உதவினால் இப்பொழுதும் உச்சநெறி மன்றத்திற்கு (சுப்ரீம் கோர்ட்டுக்கு)ப் போக நம் இயக்கம் அணியமாக உள்ளது.

இதற்கான போராட்டத்தில் இணைவோம் வெல்வோம்—என அனைத்துப் பெரியார் கொள்கையினரையும் அன்புடன் அழைக்கிறோம்.

—பெரியார் தாசன்
துணைச்சிறப்பாசிரியர் 'அறிவு வழி' சென்னை-106
(நன்றி: அறிவு வழி' நவம்'92)

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஏறத்தாழ மூவாயிரம் மலிவுவிலை மதுக் கடைகளை மூடியவர், பின்னர் பொதுமக்களின் எவ்வளவோ கண்டனக் குரல்களுக்கு இடையிலும், ஐயாயிரம் மதுக்கடைகளைக் கூடுதல் வருமானத்துடன் 'கோலாகுலத்துடன்' திறந்து, 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்று நடந்து கொண்டிருப்பாரா?

அண்மையில் சிவகங்கையில் நடந்த விழாவில் செயலலிதாவின் வெட்டுருவம் ஒன்றிற்கு 25 ஆயிரம் என்ற அளவில் 52 பெருமாண்டமான 'இராட்சத' வெட்டுருவங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஏறத்தாழ 13 இலக்கம் உருபா இதற்கு மட்டும் செலவழிக்கப்பட்டுள்ளதென்றால், இந்தப் பணம் எல்லாம் சாராயக் கடைக்காரர்கள் பணம் என்று பொதுமக்கள் கருதுவதில் என்ன தவறு இருக்க முடியும்? சிவகங்கைத் திருவிழாவிற்கு மட்டும் 400 இலக்கம்(4கோடி) உருபா செலவழிக்கப்பட்டிருக்கும் என்று சொல்கிறார்கள். அவ்விழாவில் அமைச்சர் கண்ணப்பன் செயலலிதாவிற்கு மேடையில் வைத்தே 101 பவுன் தங்க நகைகளை (மதிப்பீடு ஏறத்தாழ 4இலக்கம்) வெளிப்படையாக அன்பளிப்புச் செய்ததாகச் செய்திகள் வந்துள்ளன. வெளிப்படையாகவே இவ்வளவு என்றால் மறைமுகமாக என்னென்னவோ எவ்வெவ்வளவோ யார் கண்டு கணக்கெடுக்க முடியும்?

எப்பொழுதுமே ஊழல் ஆயிரத்துக்கு 50 அல்லது நூற்றுக்கு 5 என்னும் விழுக்காட்டு அளவில்தான வெளிப்பட முடியும் என்று அரசியல் ஆய்வாளர்களே கூறுகிறார்கள்.

விளக்கணி (தீபாவளி)த் திருவிழாவில் ஆரணி, தர்மாவரம், காஞ்சிபுரம், மைசூர் முதலிய ஊர்களிலிருந்தெல்லாம் தனி ஏவம் (ஆர்டர்) கொடுத்துத் தருவிக்கப்பட்ட மிகமிக விலையுயர்ந்த பட்டுப் புடவைகளும், முப்பது இலக்க மதிப்-

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

புள்ள வெடி வாணங்களும், போயசு தோட்டத்தில் சதபுதலாடியனவாம்! இவற்றையெல்லாம் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? அரசுப் பதவியையும் அதிகாரத்தையும் பயன்படுத்தி செயலலிதா ஏராளமாகச் சொத்துகளைச் சேர்த்து விட்டார் என்று சுப்பிரமணியம் சுவாமி முதல் அனைவரும் குற்றம் சாட்டுகிறார்கள்? இருந்தும் என்ன? குத்துக்கல்லாகக் கோட்டையில் உயிருடனும், பனைமரம் உயரமுள்ள வெட்டுருவங்களாக ஊர் ஊராகவும் தெருத் தெருவாகவும், செயலலிதா உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும், ஊர்வலம் வந்து கொண்டுந்தான் உள்ளார். அவரின் அடி வணங்கும் அமைச்சர் ஒருவர் சொன்னது போல், அவரை எவருமே அசைத்துப் பார்க்க முடியாது என்பது உண்மையாக இருந்தாலும், வியப்பதற்கில்லை. ஏனெனில் அவரை ஆதரிப்பதும் பார்ப்பனர்கள்தாம்! எதிர்ப்பதும் பார்ப்பனர்கள்தாம்!

பாம்புகளில் நாகம், கருநாகம், கட்டுவிரியன், சாரை—என்றெல்லாம் வேறுபாடுகள் இல்லை; அனைத்தும் ஒரே நச்சு வகைதாம்! அதே போல, பார்ப்பனர்களிலும் செயலலிதா, நரசிம்மராவ், சுப்பிரமணியம் சுவாமி, சோ, அத்வானி, வாச்பேயி, கசுத்தூரிரங்கன் என்றெல்லாம் வேறுபாடில்லை; அனைவர் முயற்சியும் ஒன்றுதான்! அது,தமிழரை அழிப்பதே! O

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருங்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமையை—தன்னுறுதி உரிமையை (சுய நிர்ணய உரிமை) (Self determination) வழங்க மறுக்கிறது. அந்த உரிமையை வேண்டுகின்ற தமிழ் இன உணர்வுள்ள அரசியல் தலைவர்களைச் சிறைப்படுத்துகிறது. அந்த உரிமையை வேண்டுகின்ற தமிழ் இன உணர்வுள்ள அரசியல் கட்சிகளைத் தடை செய்து விடுவதாக அச்சுறுத்துகிறது.

இந் நிலைகளை நன்குணர்ந்து தமிழரின் வருங்கால நலங் கருதும் எல்லாத் தமிழர்களும் (அவர்கள் எந்தக் கட்சியைச் சாதியை, மதத்தைச் சார்ந்திருந்தாலும்) அந்த உரிமையைக் கோரும் அஞ்சா நெஞ்சினரான **இராமதாசு, நெடுமாறன்** அனைய அரசியல் தலைவர்களுக்கும், அந்த உரிமையை வேண்டுகின்ற **தமிழ்த் தேசியக் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி** அனைய அரசியற் கட்சிகளுக்கும் துணை நிற்க வேண்டும் என உலகம் யாண்டும் வாழும் மெய்த் தமிழ் நெஞ்சினர் பேரில் வேண்டுகின்றோம்.

தமிழினத்தின் வருங்காலம்—தமிழகத்தின் வருங்காலம்—நமது பிள்ளை, பேரப் பிள்ளைகளின் வருங்காலம்—வளமாக மலருவதற்கான முதற்படி இந்த உரிமைக் கோரிக்கை. அதற்குக் கட்சி, சாதி, மத வேறுபாடின்றி அனைத்துத் தமிழரும் துணை நிற்பாராகுக!

வாழ்க தமிழ் இனம்!

TN/MS (C)657

நூல்-அஞ்சல்

பெறுநர்

தமிழ்நிலம் எண் 157-இதழ்க் கண்ணோட்டம்

ஞாயம், நேர்மை, நெறிமுறை தவறி நடக்கும் ஆட்சியை, மணிமேகலை காட்டும் 'அரசு மரபு' சொல்லிப் பாவலரேறு அவர்கள் நடுங்கா நெஞ்சத் துணிவுடன் எழுதிய கட்டுரையின் நுட்பம் தெரிந்து பாராட்டுவோம். 'பார்ப்பனியம்', 'பார்ப்பனிய ஏடுகள், பார்ப்பனிய ஆதரவு காரணமாக ஞாயம், நேர்மை, நெறிமுறைகளைக் கைவிட்டு விடுகின்றன. தமிழர்களோ, தமிழின ஆர்வலர்களோ, 'இனம் கடந்த' ஞாயம், நேர்மை, நெறிமுறை பேசி இன நலம் கெட்டு வருகிறார்கள் என்பதே அந்த நுட்பம்!

வழக்கறிஞர் பி.வி. பக்தவத்சலம் அறிக்கை, 'ஒடுக்குமுறை' எந்த வடிவத்தில் தோன்றினாலும், குடிநாயக முறையில் எதிர்ப்பதைக் காண்க!

'இனம் மீண்டும் எழுகிறது'—குறு கட்டுரையை வெளியீடாகக் கொண்டுவர உ.த.மு.க விற்கு உதவுகின்றவரை எதிர்பார்ப்போம்!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா 'அவர்களை உ.த.மு.க. சார்பாகத் தொடர்பு கொள்ளவும் வேண்டும். உலக அரசியல் கருத்தோட்டங்களை எழுதிவரும் அவருடைய கருத்துகளைச் சிறுநூல் வடிவில் பரப்புவது ஒரு தெளிவை நமக்குள் ஏற்படுத்தும்.

மீட்பன் 'தமிழின எழுச்சிக்கான தடயங்களை'த் தொட்டுக் காட்டியுள்ளார். இதனைத் தொடர்ந்து 'எழுச்சி' விளக்கங்களை மற்றவர்களும் எழுதுதல் வேண்டும்.

திரு. க. கண்ணன் அறி.இ. எழுதும் 'அரசியல் சொல்லாடல்கள்'பற்றி அரசியல் முனைப்புடைய கட்சிகள் ஆராய்ந்து கருத்துரைக்கும் காலம் வரும். அதுவரை அரசியல் அறிந்தவர்கள் சும்மா இருக்கவேண்டுமா என்ன? உ.த.மு.கவினர்களும் 'இவரை' நன்கு திறனாயலாமே! செய்வார்களா?

—பறம்பை அறிவன்.